ARAN International e-Journal of Tamil Research

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :28 October 2025*

கோட்டை:7 வாயில்:28 அக்டோபர் 2025

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

*+917299587879*

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


**ஐங்குறுநூறு 'சிறுவெண் காக்கைப் பத்து' பாடல்களில் எடுத்துரைப்புச் சிறப்புகள் மற்றும் நுட்பங்கள்**
**முனைவர் நா.ஜானகிராமன்[1], முனைவர் பெ.தனலட்சுமி[2]**

**குறுந்தொகையை தழுவிய இக்கால படைப்புகளில் இலக்கியநயம்**
**மெ.பேபி நிஷாந்தினி**

**பட்டினப்பாலையில் பழந்தமிழரின் கடற்பயணத்தில் மரக்கலங்கள்**
**ப.ராம்குமார்**

**புறநானூற்றில் உயிரியல் செய்திகள்**
**எம்ஜிராமச்சந்திரன். வெ**

**புறநானூற்றில் தமிழர் பண்பாடு**
**திருமதி கா.சுகன்யா,**

**செவ்வியல் இலக்கியங்களில் இல்லறத்தில் தாயின் பங்களிப்பு**
**இரா.சினேகலதா**

**திருக்குறளில் உழவும் உண்மைநிலையும்**
**முனைவர் இரா.ஜெய்சங்கர்**

**திருக்குறளில் மருத்துவச் செய்திகள்**
**முனைவர் சல்மா மஹ்ஜபீன் த. மு**

**திருக்குற்றாலக் குறவஞ்சியில் குறத்தியின் குறிசொல்லும் பான்மை**
**க.நித்தியா**

**அபிராமி அந்தாதி - ஒரு பார்வை**
**சா.கஸ்தூரி**

**வேட்டுவர்களின் பண்பாட்டு சார்ந்த மரபுகள் — சிலப்பதிகாரம்**
**முனைவர் த. சுபஜா**

**வைணவ உரைச் சக்ரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளை**
**முனைவர்ப.தனஞ்செயன்**

**தெய்வங்களும் கோவில்களும்**
**அ.அறிவுக்கொடி**

**பெரும்பண்ணையூர், சிமிழி, புதுக்குடி கிராம மக்களின் சிறுதெய்வ வழிபாட்டில் மக்கட்பேறு சடங்குப் பின்புலம்**
**க.கார்த்திகா**



**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

**நன்றி**

# அகத்தினுள்

பாம்பாட்டிச் சித்தர் பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள்
முனைவர். க.விமலா

திருக்குர்ஆன் கூறும் மாந்தர் ஒழுக்கங்கள்
அ.ஷமீலா பேகம்

ஜோ டி குரூஸின் யாத்திரை புதினத்தில் சிறுவனின் தேடல்கள்: கத்தோலிக்கம் மற்றும் பூர்வீக நம்பிக்கைகளின் புரிதல்கள்
முனைவர் தா. இரா.ஹெப்சிபா பியூலா சுகந்தி

கூகை புதினத்தில் கையாளப்பட்டுள்ள உத்தி முறைகள்
இரா.ராஜேஷ் குமார்

எஸ்.இராமகிருஷ்ணனின் மூன்று அற்புதங்கள் சிறுகதையில் தெக்கனின் பாத்திரப்படைப்பு
ஜெ.சர்மிளா

தோட்டியின் மகன் நாவலில் மக்களின் உணர்வுகளும் போராட்டங்களும் முனைவர் வ.மீனாட்சி

கூளமாதாரி புதினத்தில் தலித்தியம்
வீ. சவிதா

வௌவால் தேசத்தில் இயற்கை சூழல்
மு.ஹரிதேவி

சோ. தர்மனின் சூல் நாவலில் பழமொழிகள்
மு.கோமதி

சோ. தர்மனின் 'சூல்' நாவலில் உவமைகள்
இ.ராபர்ட் கென்னடி

மலையகத்தமிழரும் அகதி வாழ்வும்
வேளாங்கன்னி.ஏ

அண்மைய நாவல்களில் மீனவர்களின் பண்பாட்டியல்
முனைவர் ந. இரத்தினக்குமார்

கே.பி கறுப்பனின் பெண்ணியச் சிந்தைனகள்
தனிஜா த. பெ

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


பொதிகைமலையின் ஆயண்டிரன்
முனைவர் த. முத்துலட்சுமி

பாண்டிய நாட்டுத் துறைமுகங்கள்
கி.தமிழரசி

பழந்தமிழர்களின் வாழ்வியலில் மலர்ப் பயன்பாடு ஒரு பார்வை
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

வாய்மொழிப் பாடல்களில் பஞ்சகாலக் குறிப்புகள்
ம.கலைச்செல்வன்

இலக்கியங்களும் பசிப்பிணியும்
முனைவர் ப. மணிகண்டன்

அறிவியல் நுட்பங்களும் இலக்கிய செழுமையும்
முனைவர் அ.புஷ்பா

கணினித்தமிழ் வளர்ச்சியில் இணைய நூலகங்கள்
கு.நிவேதா

மொழி வளர்ச்சியில் ஊடகத்தின் பங்கு
முனைவர் ஈ இசக்கியம்மாள்

*1.The Predicament of Women in Patriarchal Society in Anita Nair's The Better Man*
**K. Nesapriya**

திரைப்படக் கதைசொல்லலும் சமூகத் தாக்கமும்: அசுரன் திரைப்படம்.
(திரைப்படக் கோட்பாடுகள், தொழில்நுட்ப அழகியல் மற்றும் பார்வையாளர் வரவேற்பு)
திரு. விசுமாப்போடி சசிகரன்

பாலக்காடு மாவட்டத்தில் சுமை தாங்கி
முனைவர் வே.இரவி

கீழடி அகழாய்வு - தமிழரின் தொன்மையான வரலாற்று பின்புலம்
முனைவர் அ. மதலேன்

சம்புவராயர் கல்வெட்டுகளில் அறியலாகும் நாடும் ஊரும்
முனைவர்அ. அமுல்ராஜ்

பரதநாட்டியத்தில் நால்வகை விருத்தியின் வகிபங்கு
கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# தமிழ்

# *The Gods and Temples*

***A. Arivukodi,*** *Ph.D. Research Scholar, Department of Tamil, Meenakshi Ramasamy Arts & Science College,Thathanur, Ariyalur-621805, Tamilnadu, India. (Affiliated to Bharathidasan University, Tiruchirappalli)ORCid:* https://orcid.org/0009-0003-0991-9996

***Dr. G. Chandrasekaran,*** *Research Supervisor, Assistant Professor, Department of Tamil, Meenakshi Ramasamy Arts & Science College,Thathanur, Ariyalur-621805, Tamilnadu, India.(Affiliated to Bharathidasan University, Tiruchirappalli)ORCid:* https://orcid.org/0009-0008-4013-0578

***Abstract***

*Political rooms, the story of the heart; Live -lived storytellers who combine with the heart; Ceylon, events, charities, etc. are spoken in Chilambi. This includes the various standards, the states, the policies, the race and the professionals. The prosperity of Tamil Nadu, the life of the Tamil people, the biological norms of the Tamil people are all shining in the light. Today is one of the 41 books of Classical Literature. This article talks about the deities worshiped in their lives. There have been many worship in the world in accordance with the quality of knowledge of the people. Even when the people have attained high knowledge, they are found in every place.*

***Keywords:*** *Thirumal, Murugan, Mohini Devil, Iyai, Lord Shiva, Valli, Dakshinamoorthy, Indran.*

**தெய்வங்களும் கோவில்களும்**

**அ.அறிவுக்கொடி,**முனைவர்பட்டஆய்வாளர்(Ref.No.036358/Ph.D.K8/Tamil/P.T./Extn.1,2&Re.Regn./January 2016/Dt:08.09.2024) தமிழாய்வுத்துறை, மீனாட்சி இராமசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி,

தத்தனூர், அரியலூர் மாவட்டம் — 621 805, தமிழ்நாடு, இந்தியா. (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவுப் பெற்றது)

**முனைவர் கு.சந்திரசேகரன்,** உதவிப் பேராசிரியர் - ஆய்வு நெறியாளர், தமிழாய்வுத்துறை, மீனாட்சி இராமசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தத்தனூர், அரியலூர் மாவட்டம் — 621 805, தமிழ்நாடு, இந்தியா. (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவுப் பெற்றது)

**ஆய்வுச் சுருக்கம்**

அரசியல் அறங்கள், உள்ளத்தை வயப்படுத்தும் கதை; உள்ளத்தோடு ஒன்றி கலந்து விடும் உயிர்ப்புள்ள கதைமாந்தர்கள்; ஏழிசை இலங்கும் கூத்து, நிகழ்வுகள், அறவொழுக்கங்கள் முதலியன சிலம்பில் பேசப்படுகின்றன. இதில் மக்களின் பல்வேறு தரத்தினரையும் நிலையினரையும் கொள்கையினரையும் இனத்தினரையும் தொழிலினரையும் காணச்செய்கின்றன. தமிழகத்தின் வளம், தமிழரின் ஒன்றுகலந்த வாழ்வு, தமிழ் மக்களின் வாழ்வியல் நெறிகள் எல்லாமே சிலம்பில் ஒளியிட்டு மிளிர்ந்து கொண்டிருக்கின்றன. இன்று செவ்வியல் இலக்கியம் 41 நூல்களில் அடங்கியுள்ளவற்றுள் சிலப்பதிகாரமும் ஒன்று. இதில் மாந்தர்கள் தம் வாழ்வில் இன்பம் எய்திட வழிபடும் தெய்வங்கள் பற்றி இவ்ஆய்வுக்கட்டுரை பேசுகிறது. மக்கள் அறிவு வளர்ச்சித் தரங்களுக்கு ஏற்ப உலகில் பலவகையான வழிபாடுகள் தோன்றலாயின. மக்கள் உயர்ந்த அறிவை அடைந்துள்ள காலத்தும் அவ்வழிபாடுகள் ஆங்காங்கு ஒவ்வோர் இடங்களில் காணப்படுகின்றன.

**திறவுச்சொற்கள்:** திருமால், முருகன், மோகினிப் பிசாசு, ஐயை, சிவபெருமான், வள்ளி, தட்சிணாமூர்த்தி, இந்திரன்.

**முன்னுரை**

இறைவழிபாடு (தெய்வ வழிபாடு) பண்டைக் காலத்தில் இருந்துள்ளது. இதனை தொல்காப்பியர்,

**மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும் (அகத்., நூ.5:1-4)**

எனும் நூற்பாவில் திருமால், முருகன், இந்திரன், வருணன் ஆகிய நான்கு தெய்வங்களையும் நானிலம் போற்றி வந்துள்ளதனை வரையறை செய்துள்ளார். இஃது தெய்வ வழிபாட்டில் மக்கள் பெரும்பான்மையோடு ஈடுபாடு கொண்டமை புலப்படுகிறது.

மேற்குறித்த தொல்காப்பியர் வரையறைக்குத் தற்கால ஆய்வாளர்கள் "முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்னும் நால்வகை நிலங்களில் வாழ்ந்த மக்களின் இறைவழிபாடு பற்றி . . . காடும் காடுசார்ந்த இடமக்களின் தெய்வமாக மாயோனையும்; குன்றுகள் நிறைந்த பிரதேசத்து மக்கள் வழிபாட்டுத் தெய்வமாக சேயோனையும்; கடலும் கடல் சார்ந்த இடமக்களின் தெய்வமாக இந்திரனையும்; மணல் நிறைந்த பிரதேச மக்களின் வழிபடு தெய்வமாக வருணனையும் எடுத்துக் காட்டுகின்றார்" (ப.110) என்று பிருந்தாதேவி மற்றும் சுந்தரமூர்த்தி ஆகியோர் தம் ஆய்வில் குறிப்பிடுகின்றனர்.

**இந்திரன்**

சிலப்பதிகார காலத்திலே தமிழ்நாட்டு மக்கள் பல தெய்வங்களை வணங்கினர். பல சிறுதெய்வங்களையும், பல பெருந்தெய்வங்களையும் தமிழ் மக்கள் போற்றி வந்துள்ளனர். தமிழகம் எங்கும் தெய்வங்களுக்குத் தினப்படி பூசைகள் நிகழ்ந்தன; அடிக்கடி திருவிழாக்களும் நடத்தப்பட்டன.

இந்திரன் தமிழகம் முழுவதும் தெய்வமாகப் போற்றப்பட்டான். மருதநிலத் தெய்வம் இந்திரன். கழகத் தமிழ் அகராதி "தேவர்கோன், இறைவன், கடவுள், தலைவன், அரசன், புலவன்" (ப.109) என்னும் பொருள்களைத் தருகிறது. ஆதலால், நல்ல வளம் பொருந்திய ஊர்களில் எல்லாம் இந்திரனுக்குக் கோவில்கள் இருந்தன. ஆண்டுதோறும் காவிரிப்பூம்பட்டினத்லே இந்திரவிழா நடைபெற்றது. அந்த இந்திரவிழாவைக் காண, நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் திரளான மக்கள் வந்து கூடுவர். இந்த இந்திரவிழாச் சிறப்பைச் சிலப்பதிகாரத்தில் "இந்திரவிழவு ஊர்எடுத்த காதை"யிலே காணலாம். இந்திரன் பாரதநாட்டு மக்கள் அனைவராலும் போற்றப்பட்டுள்ளான். வேதங்களிலே இந்திரனைப் பற்றிய தோத்திரப் பாடல்கள் ஏராளமாகக் காணலாம்.

**மோகினிப் பிசாசு** என்று ஒரு தெய்வம் உண்டு. இது அழகான பெண் உருவில் வந்து ஆண்களை மயக்கும்; கனவிலே தோன்றி ஆண்களைக் காமவிகாரம் கொள்ளச் செய்யும். இவ்வாறு இத்தெய்வத்தைப் பற்றிப் பல கதைகள் சொல்லுவர். இத்தெய்வத்தைப் பற்றியும் சிலப்பதிகாரத்தில் சொல்லப்படுகின்றது "ஓர்ஆரஞர்த் தெய்வம்" (11:144), "கான் உறை தெய்வம்" (11:171) என்ற பெயர்களால் இத்தெய்வம் சுட்டப்படுகின்றது. வனதேவதை என்றும் இதைக் கூறுவர்.

"கடத்தற்கு அரிய வழியிலே மிகுந்த துன்பத்தைத் தரும் தெய்வம் ஒன்று உண்டு; அத்தெய்வம் தோன்றி இடையூறு செய்யாது; அச்சம் விளைக்காத நயமான முறையிலே வழிப்போவாரைத் தடுக்கும்."

**ஆர்இடை உண்டுஓர் ஓர் ஆரஞர்த் தெய்வம்**
**நடுக்கம் சாலா நயத்தின் தோன்றி**
**இடுக்கண் செய்யாது இயங்குநர்த் தாங்கும்** (காடுகாண்.144-145)

இவ்வாறு இத்தெய்வத்தின் தன்மை கூறப்படுகின்றது. இத்தெய்வம் சம்பந்தமான நிகழ்ச்சி ஒன்றும் காணக் கிடக்கின்றது.

ஒரு பொய்கையிலே நீருண்ணும் வேட்கையினால் கோவலன் நின்றான். அப்போது இத்தெய்வம் மாதவியின் தோழி வசந்தமாலை வடிவிலே வந்தது (11:169-173); கோவலனை மயக்கும் பொருட்டு, மாதவி சொல்லியதாகச் சில சொற்களை கூறியது; கோவலன் பாதங்களில் வீழ்ந்து வணங்கிற்று. கோவலன், அது வனதேவதை என்று ஐயுற்றான். உடனே

அவன் துர்க்கையின் மந்திரத்தைச் சொல்லி அத்தெய்வத்தின் சூழ்ச்சியை அகற்றினான். இந்நிகழ்ச்சியை அடிகளார்தம் "காடுகாண் காதை"யிலே 174-200 அடிகளில் காணச்செய்கிறார்.

ஐயை பாலை நிலத்தின் தெய்வம். வேட்டுவர்கள் இத்தெய்வத்தைக் கொண்டாடுவர் (12:66-71). பாய்கலைப் பாவை, கொற்றவை, அமரி, குமரி, கவுரி, சமரி, சூலி, நீலி, சங்கரி, அந்தரி முதலிய பல பெயர்களால் இத்தெய்வம் வழங்கப்படுகின்றது. துர்க்கை, காளி என்ற பெயர்களும் இத்தெய்வத்தைக் குறிக்கும். ஐயை என்பதற்குத் தமிழ்-தமிழ் அகரமுதலி "தலைவி, காளி, தவப்பெண், குருபத்தினி, மகள், பார்வதி, துர்க்கை, இடைச்சி" எனும் பெயர்களைக் குறிக்கின்றது.

வேட்டுவர்களும், வேட்டுவப் பெண்களும் இத்தெய்வத்திற்குப் பலியிட்டுப் போற்றுவார்கள். இதை "வேட்டுவ வரி" என்னும் பகுதியிலே காணலாம்.

கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் மூவரும் பாலைவன வழியிலே செல்லும்போது வெப்பத்தால் களைத்தனர். களைப்புத்தீர ஐயைக் கோட்டத்தின் ஒருபுறத்திலே ஒதுங்கினர். அப்பொழுது அங்கு நிகழ்ந்த விழாவை அவர்கள் கண்டனர். இவ்வாறு தொடங்குகின்றது வேட்டுவ வரிக் காதை.

**திருமால்**

பாண்டிய மன்னன் எங்கெல்லாம் போரிடுகின்றானோ அவ்வவ் நாட்டின் முடிமன்னர்கள் தோற்று அவனை வணங்குவதனால் அவன் திருவடிகள், காட்சித் தருவதனைச்

**செங்க ணெடியான்மேல் தேர்விசையன் ஏற்றியபூப்**
**பைங்கண்வெளி ஏற்றான்பால் கண்டற்றால் (முத்தொள்.91:1-2)**

என்று முத்தொள்ளாயிரம் குறிப்பிடுகிறது. இதற்கு உரை எழுதும் செ.உலகநாதன், "அழகிய கண்களையுடைய வெண்ணிற காளையில் வரும் சிவபெருமான் திருவடிகளைக் கண்டதைப் போல் திருமால் காட்சி தருகின்றான்" (ப.78) என்று குறிப்பிடுகிறார்.

ஐயை சிவபெருமான் வடிவாகவும், திருமால் உருவாகவும் போற்றப்படுகின்றாள். அவளை வேடர்கள் எவ்வாறு வணங்குகின்றனர் என்பதைப் பற்றி "வேட்டுவ வரி"யிலே விரிவாகக் கூறுகிறார் இளங்கோவடிகள்.

கண்ணன் சரிதம் சிலப்பதிகாரத்திலே காணப்படுகின்றது. ஆய்ச்சியர் குரவையிலே இதைக் காணலாம். ஆயர் முல்லைநில மக்கள், அந்நிலத் தெய்வம் மாயோன்; கண்ணன் திருமாலின் அவதாரம்.

"ஆய்ச்சியர் குரவை"யிலே திருமாலின் அவதாரங்கள் பல குறிப்பிடப் பட்டுள்ளன. கண்ணன் பால லீலைகளும் ஏனைய செயல்களும் விரிவாகக் காணப்படுகின்றன.

**பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்** (ஆய்ச்சியர் குரவை, 9:20)

**வடவரையை மத்தாக் வாசுகியை நாண்ஆக்கிக்**

**கடல்வண்ணன் பண்டுஒருநாள் கடல் கயிறு கலக்கினையே!**

*(ஆய்ச்சியர் குரவை, 13:32)*

இவை, தேவர்கள் பாற்கடலைக் கடையத் திருமால் உதவி செய்த கதையைக் குறித்தனவாகும்.

**திரண்டமரர் தொழுதேத்தும் திருமால்! நின்செங்கமல**

**இரண்டு அடியால் மூவுலகும் இருள்தீர நடந்தனையே**

*(ஆய்ச்சியர் குரவை, 34)*

இது, திருமால் வாமனாவதாரம் எடுத்ததையும், மாவலிபால் மண்பெற்றுத் திரிவிக்கிரம அவதாரமாகத் திகழ்ந்ததையும் குறிக்கும்.

**மூவுலகும் ஈர்அடியால் முறைநிரம்பா வகைமுடியத்**

**தாவியசே வடிசேப்பத் தம்பியொடும் கான்போந்து**

**சோஅரணம் பேர்மடியத் தொல் லிலங்கை கட்டழித்த**

**சேவகன்சீர் கேளாத செவிஎன்ன செவியே?**

**திருமால்சீர் கேளாத செவிஎன்ன செவியே?** *(ஆய்ச்சியர் குரவை, 35)*

இது திரிவிக்கிரம அவதாரத்தையும், இராமாவதாரத்தையும் எடுத்துக் கூறுகிறது.

பெரியகோவில் என்று வைணவர்களால் பாராட்டப்படும் திருவரங்கம் சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றது. “திருமால் திருவரங்கத்திலே பொன்னிற உருவுள்ள - ஆயிரம் தலைகளையுடைய - ஆதிசேடனாகிய பாம்புப்படுக்கையிலே பள்ளி கொண்டிருக்கின்றார். அக்காட்சி, பொன்மலையின் மீது, நீலமேகமானது பக்கமெல்லாம் கவிந்து அகலாது படிந்து இருப்பதுபோல காணப்படுகின்றது.

**நீல மேகம் நெடும்பொன் குன்றத்துப்**

**பால்விரித்து அகலாது படிந்தது போல,**

**ஆயிரம் விரித்துஎழு தலைஉடை அருந்திறல்**

**பாயற் பள்ளி பலர்தொழுது ஏத்த**

**விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தி**

**திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும் -** *(காடுகாண்.35-40)*

எனும் தொடர்கள் திருவரங்கத்தின் காட்சியைக் காட்டுகின்றன. அஃதாவது ஆயிரம் தலைகளை விரித்து எழுகின்ற ஆதிசேடனாகிய பாயலிலே பள்ளிகொண்டு, பலரும் தொழுதுபோற்ற, அலை எழுகின்ற காவிரியின் அகன்ற ஆற்றிடைக் குறையிலே, திருமகள் அமர்ந்த மார்பனான திருமால் பள்ளிகொண்டிருக்கின்றான். இதேபோன்று திருவேங்கடத்தின் காட்சி பின்வருமாறு சித்திரிக்கப்பட்டிருக்கின்றது.

வேங்கடமலையிலே சிறந்த அருவி உண்டு. அந்த மலையின் உச்சியிலே, சூரியனும் சந்திரனும், இருபுறமும் உயர்ந்து காணப்படும் நடுஇடம் ஒன்றுண்டு. அந்த இடத்திலே, திருமால் சங்கு சக்கரங்களை முறையே வலக்கரத்திலும், இடக்கரத்திலும் ஏந்தி நிற்கின்றார்; அழகிய ஆரத்தை மார்பிலே பூண்டிருக்கின்றார்; பொன்னாடையை உடுத்தியிருக்கின்றார். இவ்வாறு செந்தாமரைக் கண்ணனாகிய திருமால், நின்ற கோலத்திலே காட்சியளிக்கின்றார். இத்தோற்றம், நல்ல நீலநிறமுள்ள மேகம் ஒன்று, தன் மின்னலாகிய புத்தாடையணிந்து, தன் ஒளியாகிய அணிகலன் பூண்டு, நின்று காட்சி தருவதைப் போல் காணப்படுகின்றது.

**வீங்குநீர் அருவி வேங்கடம் என்னும்**
**ஓங்குயர் மலயத்து உச்சி மீமிசை,**
**விரிகதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி,**
**. . . . . . . . . . . . . . . . . . . . . . . . .**
**நல்நிற மேகம் நின்றது போல**
**பகைஅணங்கு ஆழியும், பால்வெண் சங்கமும்**
**தகைபெறு றதாமரைக் கையின் ஏந்தி**
**நலங்கிளர் ஆரம் மார்பிற் பூண்டு,**
**பொலம்பூ ஆடையின் பொலிந்து தோன்றிய**
**செங்கண் நெடி யோன் நின்ற வண்ணமும்** (காடுகாண்.41-51)

இவ்வடிகளிலே வேங்கடத்தின் விழுப்புகழ் பேசப்படுகின்றன.

திருமால் குன்றம் என்ற பெயரால் அழகர்மலை கூறப்படுகின்றது. அதன் பெருமை, அதில் உள்ள சிலம்பாறு, புண்ணிய சரவணம், பவகாரிணி, இட்டசித்தி என்னும் தீர்த்தங்களின் மகிமை இவைகள் எல்லாம் "காடுகாண் காதை" 91 முதல் 140 வரையில் உள்ள அடிகள் உணரச்செய்கின்றன. இதைச் சிறுகதை என்னும் பகுதியிலே காணலாம். சிலப்பதிகாரத்தில் இன்னும் பலவிடங்களில் திருமாலைப் பற்றிய குறிப்புகளைக் காணலாம். சிலப்பதிகார காலத்திலே பலதேவனும் தெய்வமாகப் போற்றப்பட்டான்.

நாளங்காடிப் பூதம், வெள்ளிடைமன்றப் பூதம், பூதசறுக்கப் பூதம், பாசண்டச் சாத்தன், வசுக்கன் எண்மர், பன்னிரு திவாகரர், பதினேழு உருத்திரர், மருத்துவர் இருவர் ஆகிய நால்வகைத் தேவர்கள், பதினெண்வகைத் தேவகணங்கள் "இந்திரவிழவு ஊர்எடுத்த காதை"யிலே காணப்படுகின்றன.

நால்வகை வருண பூதங்கள், மதுராபதித் தெய்வம், அக்கினி தேவன் இவைகள் அழல்படு காதையிலும், கட்டுரை காதையிலும் காணப்படுகின்றன.

**முருகன்**

முருகனைப் பற்றிப் பலவிடங்களில் சிலப்பதிகாரத்திலே காணலாம். முருகன் குறிஞ்சிநிலத் தெய்வம், குறவர்கள் முருகனைப் போற்றி விழா எடுத்ததைப் பற்றிக் குன்றக் குரவையிலே கூறப்படுகின்றது.

**சரவணப்பூம் பள்ளிஅறைத் தாய்மார் அறுவர்**
**திருமுலைப்பால் உண்டாள்** (குன்றக்குரவை, 7:10:1-2)

இது, "முருகன் சரவணப் பொய்கையிலே, தாமரைப் பள்ளியிலே, கார்த்திகைப் பெண்கள் அறுவராலும் பால் கொடுத்து வளர்க்கப்பட்டான்" என்னும் கதையைக் குறித்தது.

**அணிமுகங்கள் ஈர்ஆறும் ஈர்ஆறு கையும்**
**இணையின்றித் தான்உடையான் எய்தியவேல், அன்றே**
**பிணிமுகம்மேற் கொண்டு, அவுணர் பீடுஅழியும் வண்ணம்**
**மணிவிசும்பின் கோன்ஏத்த மாறுஅட்ட வெள்வேலே**

(குன்றக்குரவை, 7:9)

இவ்வடிகளில் முருகன் வரலாறு சுருக்கமாகக் காணப்படுகின்றது. "முருகனுக்கு ஆறு முகங்கள், பன்னிரண்டு கைகள், மயில் வாகனம், வேலாயுதம் ஆகியன உண்டு. அவன் இந்திரன் வணங்கும்படி - அவன் துயர் தீர - தன் வேற்படையால் அசுரர்களை அழித்தான்." இது மேலே காட்டிய அடிகளில் உள்ள வரலாறு.

**பார்இரும் பௌவத்தின் உள்புக்குப் பண்டுஒருநாள்**
**சூர்மா தடிந்த சுடர்இலைய வெள்வேலே** (குன்றக்குரவை, 7:8)

என்று, முருகன் கடலுள் புகுந்த மறைந்த சூரனைக் கொன்ற கதை கூறப்படுகின்றது.

**குருகு பெயர்க் குன்றம் கொன்ற நெடுவேலே!** (குன்றக்குரவை, 7:10:4)

என, முருகன் கிரவுஞ்ச கிரியைப் பிளந்த கதை சுட்டப்படுகின்றது.

**ஆல்அமர் செல்வன் புதல்வன்** (குன்றக்குரவை, 8:13)
**கயிலை நன்மலை இறைமகன்** (குன்றக்குரவை, 9:16)
**மலைமகள் மகன்** (குன்றக்குரவை, 9:17)

என, முருகன் பரமசிவன் - பார்வதி புத்திரனாகக் குறிக்கப்படுகின்றான்.

**நீலப் பறவைமேல் நேர்இழை தன்னோடும்**
**ஆல்அமர் செல்வன் புதல்வன் வரும்** (குன்றக்குரவை, 9:15)

மயிலின்மேல் வள்ளியம்மையுடன், சிவபெருமான் புதல்வன் வருவான்.

**குறமகள் அவள்எம் குலமகள் அவளொடும்**
**அறுமுக ஒருவ! நின் அடியிணை தொழுதேம்**

(குன்றக்குரவை, 9:18)

“எமது குலமகளாம் குறமகளாகிய வள்ளியும் காணப்படும் ஆறுமுகங்களையுடைய ஒப்பற்றவனே! உனது இரண்டு அடிகளையும் பணிகின்றோம்.”

இவ்வாறு முருகன் போற்றப்படுகின்றான். இங்கே வள்ளியை மட்டுந்தான் முருகன் மனைவியென்று கூறப்பட்டுள்ளது. மற்றொரு மனைவியாகிய தெய்வயானையைப் பற்றிய குறிப்பு குன்றக் குரவையிலே காணப்படவில்லை.

திருச்செந்தூர், திருச்செங்கோடு, வெண்குன்றம், ஏரகம் என்பவை முருகன் உறையும் திருப்பதிகளாகக் கூறப்பட்டிருக்கின்றன.

வெண்குன்றம் என்பது சுவாமிமலை எனச் சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர் கூறியுள்ளார். திருவேரகம் என்பது ஒரு மலைநாட்டுத் திருப்பதி என நச்சினார்க்கினியர் நவின்றுள்ளார். ஆதலால் அது ஒரு மலைநாட்டுத் திருப்பதியாகத்தான் இருக்க வேண்டும். பிற்காலத்தினர் திருவேரகம் என்பது சுவாமிமலை என்று கொண்டனர். இது தவறு என்பதில் ஐயம் இல்லை.

**சிவன்**

“சிவன்” என்பது சிவந்தவன் என்னும் பொருள் தருவதொரு தனித்தமிழ்ச் சொல். பண்டையோர் இப்பெயரை ஆதியில் ஞாயிற்றுக்கிட்டு வழங்கினர். ஆகவே, ஞாயிற்று வழிபாடே சிவ வழிபாடு என்பது புலனாகும்” (ப.65) என்கிறார் ந.சி.கந்தையா பிள்ளை.

சிவபெருமானைப் பற்றிச் சிலப்பதிகாரத்திலே பல இடங்களிலே காணப்படுகின்றன.

**பிறைமுடிக் கண்ணிப் பெரியோன் ஏந்தி**
**அறைவாய்ச் சூலம்** (காடுகாண்.73-74)

“பரமசிவன் பிறைச்சந்திரனையும், மலர்மாலையையும் முடியில் அணிந்தவன்; கருக்கான முனையையுடைய சூலாயுதத்தை ஏந்தியவன்.” இதனால் சிவபெருமான் தோற்றத்தைக் காணலாம்.

சிவபெருமானுக்கு நெற்றிக்கண் உண்டு; தேவர்களுக்காக நஞ்சுண்டு, நீலகண்டன் ஆனான்; வாசுகியை நாணாகவும், இமயத்தை வில்லாகவும் கொண்டு திரிபுரத்தை எரித்தான்; யானைத் தோலைப் போர்த்தியவன்; புலித்தோலை உடுத்தியவன்; கொன்றை மாலையைத் தரித்தவன். இவைகளையெல்லாம் வேட்டுவ வரியிலே காணலாம்.

**உமையவள் ஒருதிறன் ஆக, ஓங்கிய**
**இமையவள் ஆடிய கொடுகொட்டி ஆடலும்**

(கடலாடு காதை, 4:42-43)

என்ற, சிவபெருமானுடைய நடனத்தைப் பற்றிக் கடலாடு காதையிலே காணப்படுகின்றது.

**உமைஒரு பாகத்து ஒருவன்** (நடுகற் காதை12:103, ப.399)

என்றும்,

**இமையவர் உறையும் இமையச் செவ்வரைச்**

**சிமையச் சென்னித் தெய்வம்**

(நடுகற்காதை, 22:226-227)

என்றும் நடுகற் காதையிலே சிவபெருமானைப் பற்றி காணப்படுகின்றன.

**தட்சிணாமூர்த்தி**

சிவமூர்த்தங்களில் ஒன்றாகிய தட்சிணாமூர்த்தி என்னும் பெயர் சிலப்பதிகார காலத்தில் தமிழகத்தில் வழங்கியிருக்கிறது. சங்க இலக்கியங்களிலே இப்பெயர் காணப்படவில்லை.

**சீர்த்தகு சிறப்பின் வார்த்திகன் புதல்வன்**

**ஆல்அமர் செல்வன் பெயர்கொண்டு வளர்ந்தோன்** (கட்டுரை.90-91)

எனக் காட்டுகிறார் அடிகளார். "சிறந்த வார்த்திகன் என்பவன் மகன். கல்லாலின் கீழ் இருந்து நால்வர்க்கு உபதேசித்த சிவபெருமான் பெயர் கொண்டு வளர்ந்தவன்."

**தக்கிணன் தன்னை மிக்கோன் வியந்து** (கட்டுரை.95)

அந்த வார்த்திகன் புதல்வன் பெயர் தக்கிணன் என்பது தக்ஷிணன்; தக்ஷிணாமூர்த்தி என்ற பெயரே இவ்வாறு தக்கினன் என நின்றது.

காவிரிப்பூம்பட்டினத்திலும், மதுரையிலும் இருந்த கோவில்களைக் குறிப்பிடும்போது, சிவபெருமான் கோவிலையே சிலப்பதிகாரம் முதன்மையாகக் குறிப்பிடுகின்றது. இதனால் சிலப்பதிகார காலத்தில் தமிழகத்தில் சிவவழிபாடு சிறந்திருந்தது என்று கூறலாம்.

சிலப்பதிகாரத்துத் தமிழ் மக்கள் அருகக் கடவுளையும் வணங்கி வந்தனர். அருகமத தத்துவங்கள் சாரணர்களால் தமிழ்நாட்டில் உபதேசிக்கப்பட்டன. இவ்வாறே புத்தமத தத்துவங்களும் போற்றப்பட்டன. காவிரிப்பூம்பட்டினம், மதுரை முதலிய இடங்களிலும், வேறு பல இடங்களிலும் அருகப் பள்ளிகளும், புத்தர் பள்ளிகளும் இருந்தன. அருகரும், புத்தரும் தமிழ் மக்களால் தெய்வங்களாகப் போற்றப்பட்டனர்.

இவைகளைத் தவிர பேய், பிசாசு, பூதம் என்று சொல்லப்படும் சிறுதெய்வங்களையெல்லாம்கூடத் தமிழர்கள் வணங்கி வந்தனர். தமிழ்நாட்டில் எங்கும் தெய்வ நம்பிக்கையில் மூழ்கிய மக்களே வாழ்ந்து வந்தனர். இவ்வுண்மைகளையெல்லாம் சிலப்பதிகாரம் எடுத்துரைக்கின்றது. சிலப்பதிகார ஆசிரியர் எத்தகைய வெறுப்பும் விருப்பும் இல்லாதவர். அவர் காலத்தில் தமிழகத்தில் இருந்த மக்கள் நிலையை அப்படியே படம்பிடித்துக் காட்டுகின்றார்.

தமிழகத்திலே பல தெய்வங்கள் வாழ்ந்தன. அவைகளைத் தமிழர்கள் பலமுறைகளில் வணங்கினர்; அவைகளுக்கு விழாச் செய்து கொண்டாடிக் குதூகலித்தனர். இந்திர வணக்கம், ஐயை வணக்கம், திருமால் வணக்கம், சிவ பெருமான் வழிபாடு, முருகன் வணக்கம், அருகர்

வணக்கம், புத்தர் வணக்கம் இவைகள் தமிழ்நாடு முழுவதும் பரவியிருந்தன. ஆனால், விநாயகர் வணக்கம் மட்டும் சிலப்பதிகாரத்தில் காணப்படவில்லை.

நெய்தல் நிலத்து மக்கள் வருணனைத் தெய்வமாகக் கொண்டவர்கள். சிலப்பதிகார காலத்திலே வருணனை வழிபடும் வழக்கம் குறைந்துவிட்டது, அல்லது மறைந்துவிட்டது என்று எண்ண இடந்தருகின்றது.

பட்டினப்பாலையிலே, பரதவர்கள் கடற்கரையிலே சுறாமீன் எலும்பை நட்டு அதற்குப் பூசை செய்தனர் என்ற செய்தி காணப்படுகின்றது. இது வருணன் என்னும் செய்தல் நிலத் தெய்வத்தைப் பரதவர்கள் வணங்கும் பண்டைக்கால முறை சிலப்பதிகாரத்தில் இவ்வழிபாடு காணப்படவில்லை.

**முடிவுரை**

பழந்தமிழரின் வாழ்வியலிலே, தெய்வ நம்பிக்கை முதலிடம் பெற்றதாக இருந்துள்ளது. பலப்பல தெய்வ வழிபாடுகளுடன், சிவ வணக்கம், திருமால் வணக்கம், ஐயை வணக்கம், அருக வணக்கம், முருகன் வழிபாடு, வள்ளி, தட்சிணாமூர்த்தி, வருணன் வழிபாடு முதலிய வழிபாடுகளைச் செய்துள்ளனர். இவற்றினால் தம்முள்ளே காழ்ப்பின்றி, அவரவர் மனப்போக்கின்படியே ஏற்கப்பட்டு வந்துள்ளன. விதிவழி ஆழ்ந்த நம்பிக்கையும், தெய்வ வழிபாடுகளும் மக்களை நன்னெறிப்படுத்தி, தூய மறமாண்புடன், அன்பும் அருளுடைமையும், மனிதப் பண்புச்செறிவு சிலம்பு முழுவதும் காணக்கிடக்கின்றன.

**துணைநூற் பட்டியல்**


இளம்பூரணர் (உ.ஆ.). *தொல். பொருள். (அகத்திணையியல் — புறத்திணையியல்)* (1953). சென்னை: திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், மறுபதிப்பு, 2004.

உலகநாதன், செ. *முத்தொள்ளாயிரம் (தெளிவுரை)*. சென்னை: முல்லை நிலையம், மறுபதிப்பு, 2015.

கந்தையா பிள்ளை, ந.சி. *சரித்திர காலத்திற்கு முற்பட்ட பழந்தமிழர்.* மதராஸ்: ஒற்றுமை ஆபீஸ், 1943.

கழகப் புலவர் குழு (தொகுத்தது). *கழகத் தமிழ் அகராதி.* சென்னை: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 101வது பதிப்பு, 2017.

சண்முகம் பிள்ளை, மு. (தொ.ஆ.). *தமிழ்-தமிழ் அகர முதலி.* தமிழ்நாடு: தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், 1985.

பிருந்தாதேவி, தே. & இரா.சுந்தரமூர்த்தி (க.ஆ.). "நாட்டுப்புறச் சிறுதெய்வ நடுகல் வழிபாடும் தொன்மமும்". *மணற்கேணி ஆய்வுவெளி.* தொகுதி 1, பகுதி 5, இதழ் 75, நவம்பர் 2024: 109-113.

புலியூர்க் கேசிகன் (உ.ஆ.). *சிலப்பதிகாரம் (தெளிவுரை) (1958).* சென்னை: பாரி நிலையம், மறுபதிப்பு, 2003 (மூலநூல்).

வேங்கடசாமி நாட்டார், ந.மு. (உ.ஆ.). *இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரம் மூலம்.* சென்னை: ராமையா பதிப்பகம், 2005.

வேங்கடசாமி நாட்டார், ந.மு. மற்றும் துரைசாமிப்பிள்ளை, ஔவை சு. (உ.ஆ.). *சீத்தலைச் சாத்தனார் இயற்றிய மணிமேகலை.* சென்னை: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 1994.

## *References*

*Ilampooranar (Editor). **Thol. Porul. (Agatthinaiyiyal — Puratthinaiyiyal)** (1953). Chennai: Thirunelveli, Thennindia Saiva Siddhanta Noorpadippu Kazhagam Limited, Reprint, 2004.*

*Ulaganathan, Se. **Mutthollayiram** (Thelivurai). Chennai: Mullai Nilayam, Reprint, 2015.*

*Kandhaiya Pillai, Na.Ci. **Saritthira Kaalatthirku Murpatta Pazhanthamizhar**. Madras: Otrumai Office, 1943.*

*Kazhaka Pulavar Kuzhu (Thogutthathu). **Kazhaka Tamil Akarathi**. Chennai: Thirunelveli Thennindia Saiva Siddhanta Noorpadippu Kazhagam Limited, 101st Edition, 2017.*

*Sanmugam Pillai, Mu. (Editor). **Tamil-Tamil Akar Mudhali**. Tamil Nadu: Tamil Nadu Paadanooal Matrum Kalviyiyal Panigal Kazhagam, 1985.*

*Prunthadevi, Te. & Ra. Sundaramurthi (Article Author). "Nattuppura Sirudheiva Nadugal Vazhipaadum Thonmamum". **Manarkeni Aayvuveli**. Volume 1, Issue 5, Journal 75, November 2024: 109-113.*

*Puliyur Kesigan (Editor). **Silappathikaram** (Thelivurai) (1958). Chennai: Paari Nilayam, Reprint, 2003 (Moolanool).*

*Venkadasami Nattar, Na.Mu. (Editor). **Ilangovadigal Iyatriya Silappathikaram Moolam**. Chennai: Ramaiya Pathippagam, 2005.*

*Venkadasami Nattar, Na.Mu. and Duraisami Pillai, Avvai Su. (Editor). **Seetthalai Saatthanar Iyatriya Manimekalai**. Chennai: Thirunelveli Thennindia Saiva Siddhanta Noorpadippu Kazhagam Limited, 1994.*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com